3rd November 1966]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அரசாங்கம் டாக்ஸி நடத்துவதாக உத்தேசம் இல்லை. நீலகிரி சம்பந்தப்பட்டவரையில், அங்கே மீட்டர் வைத்தால், 'ஒன் வே ட்ராபிக்' என்று ஆகிவிடுவதால், கட்டுபடியாகவில்லை என்று சொன்னார்கள். ஆகவே, மீட்டரைவைத்து நிர்ப்பந்தத்தை உண்டாக்கவில்லை. பொது மக்களும், அங்கே உள்ள ஓனர்களும், ட்ரைவர்களும், எல்லோரும் வந்து முறையீடு செய்ததன் பேரில் இவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது.

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்: தலைவர் அவர்களே, கட்டண உயர்வு இருக்கும் நிலையில், அதிகம் பேர்கள் டாக்ஸிகளில் ஏறுவதில்லை என்று தெரிகிறது. இப்பொழுது மூன்றுவது பேருக்கு மேல் அனுமதிக்கவில்லை என்பதால், 'ஆட்டோ ரிக்ஷாக்களை' அதிகமாக்கி, அவை பயன்படும் அளவில் நடவடிக்கை எடுப்பார்களா? என்று அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: தனியாக ஒரு கேள்வி போட்டால், ஆட்டோ ரிக்ஷா பற்றி விதிகள் என்ன என்று பார்த்து பதில் சொல்லலாம்.

மோட்டார் வாகன சட்டம்

* 358 கேள்வி.—திரு. சி. கோதண்டராம பாகவதர்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

போக்குவரத்து அலுவலகங்களில் வேலைப் பளுவை குறைக்கும் வகையில் பஸ்களுக்கும் (Buses) லாரிகளுக்கும் (Public Carriers) விதிக்கப்படும் காலாண்டு வரியையும் (Quarterly Tax) சர்சார்ஜ் (Surcharge)-யும் ஒன்றாக இணைத்து (Clubbing) கஜானாவிலோ அல்லது போக்குவரத்து அலுவலகங்களிலோ செலுத்தும்வகையில் மோட்டார் வாகன சட்டத்தை திருத்தும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இச் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

Technical teaching staff

* 359 *Q.*—SRI M. S. SELVARAJAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Non-technical temporary teaching staff in Government Polytechnics are not given increments while the technical temporary teaching staff are given the same;

(*b*) if so, whether there is any proposal to extend the same privilege to the non-technical teaching staff; and

(*c*) the number of teaching staff both technical and non-technical whose services have not been regularised?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Yes.

(*b*) The matter is being examined.

(*c*) Technical 85 and Non-Technical 19.